பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 13 | ஞாயிற்றுக்கிழமை | 29.09.2024 | அதிர்வு 058

## ரணிலை அழைக்கின்றது ஆசிய அபிவிருத்தி வங்கி



ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமைப் பதவியை ஏற்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் கோரிக்கை 06




# கூட்டமைப்பை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் வாருங்கள்!

## ‘வீடு’ சின்னத்தில் போட்டியிட தமிழரசு அழைப்பு
## வடக்கு, கிழக்குக்கு வெளியேயும் இம்முறை போட்டி

(கே.வசந்தன்)

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்களை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிட அழைப்பு விடுக்கவும், வடக்கு, கிழக்குக்கு வெளியேயும் தமிழ் மக்கள் வாழும் மாவட்டங்களில் தமிழரசுக் கட்சி இம்முறை போட்டியிடப் பரிசீலனை செய்யவும் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06

### தன்னைப் பற்றி மாத்திரமே சிந்திக்கும்

## சஜித்தால் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியாது!

### முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார சாடல்



“சஜித் பிரேமதாஸ இந்தச் சந்தர்ப்பத்தில் கூட தன்னைப் பற்றி மாத்திரமே சிந்திப்பவராகவே இருக்கின்றார். அவரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்று நாம் நம்பவில்லை. எனவே, பொதுக் கூட்டணியின் கீழ் பொதுச் சின்னமொன்றில் நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்குவோம்.”

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று 06




நேற்று வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம், அது தொடர்பில் நேற்று நான் குறிப்பிட்ட மாதிரி பெரும் சூடான வாத பிரதிவாதங்களுடன்தான் நடைபெற்று முடிந்திருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி கட்சி எடுத்த முடிவுக்கு மாறாக, கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவே நடந்து கொண்ட முறைமை நேற்றைய கூட்டத்தில் கடும் விமர்சனத்திற்கு உள்ளானது.

கட்சியின் கொழும்புக் கிளை உறுப்பினர் இரத்தினவடிவேல் கட்சித் தலைவருக்கு எதிராக நேற்றைய கூட்டத்தில் ஆரம்பித்து வைத்த தாக்குதல் பல தரப்பில் இருந்தும் தொடர்ந்தது. 06



# நுவரெலியா முன்னாள் முதல்வரின் வீட்டில் நேற்றுத் திருட்டுச் சம்பவம்

நுவரெலியா கஜபாபுர பகுதியில் அமைந்துள்ள நுவரெலியா முன்னாள் மாநகர சபை முதல்வரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த நகைகள் உட்பட பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் வீட்டில் இருந்தவர்கள் உறங்கிக்கொண்டிருந்தபோது வீட்டினுள் இனந்தெரியாதோர் புகுந்துள்ளனர்.

பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையின் போது வீட்டின் மேல் மாடியில் உள்ள ஜன்னலை உடைத்து உள்நுழைந்த மர்ம நபர்கள், தனி அறையொன்றில் உள்ள அலுமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சிறிய பெட்டகத்திலிருந்து தங்க நகைகள் மற்றும் சில பெறுமதியான பொருள்களை திருடிச்சென்றுள்ளமை தெரியவந்தது.

எனினும், அலுமாரிகள் உடைக்கும் சத்தம் கேட்டு வீட்டின் உரிமையாளர்கள் மேல்மாடிக்கு சென்று பார்த்தபோது ஜன்னல் திறக்கப்பட்டிருந்ததுடன், அங்கிருந்து திருடர்கள் இருவர் தப்பி ஓடுவதையும் அவதானித்துள்ளனர்.

அவ்வேளை அயலவர்களின் உதவியை நாடியுள்ளனர். இருந்தும் திருடர்கள் முச்சக்கரவண்டி மூலம் தப்பிச் செல்லும் காட்சிகள் வீட்டுக்கு அருகில் வீதியோரமாக பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. காணொளியில் பதிவாகியுள்ளது.

இதனை அடிப்படையாக கொண்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் வீட்டார் முறைப்பாடு செய்துள்ள நிலையில், தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் கைரேகை நிபுணர்கள், மோப்ப நாயுடன் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முன்னாள் ஜனாதிபதிகள், பிரமுகர்களுக்கான பாதுகாப்புத் தொடர்பில் நாளை கலந்தாய்வு



முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரமுகர்களுக்கான பாதுகாப்பு குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக நாளை கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

தற்போது பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள பிரமுகர்களுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதன் பின்னர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை குறைப்பதா, இல்லையா எனத் தீர்மானிக்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும், தலதா மாளிகை, ஸ்ரீமகாபோதி உள்ளிட்ட வணக்கஸ்தலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு குறைக்கப்பட மாட்டாது எனப் பதில் பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு தற்போது நீக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரிஷாத் கட்சியில் இருந்து விலகுகின்றேன்! நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவேன்!!

## முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் அறிவிப்பு



"அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்தும் கட்சியின் சகல உறுப்புரிமைகளில் இருந்தும் நான் விலகிக்கொள்கின்றேன். இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடவுள்ளேன்."

– இவ்வாறு முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் கடந்த பத்து வருடங்களாகப் பயணித்துள்ளேன். ஒன்பது வருடங்களாக தேசிய அமைப்பாளராக இருந்து 2015இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 34 ஆயிரம் வாக்குகளைப் பெற்று திருகோணமலை மாவட்டத்தில் முதலிடத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக நான் தெரிவாகியதுடன் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் எனக்குப் பிரதி அமைச்சர் பதவியைப் பெற்றுத் தந்தார். மக்கள் பணிக்காக இதனை அர்ப்பணம் செய்து பணியாற்றினேன்.

இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் மூதூரில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ஒருவரை நிறுத்தி திட்டமிட்டு தோற்கடிப்பதற்காகச் சஜித்தும் ஹக்கீமும் எனக்கு எதிராகச் செயற்பட்டார்கள். இதனை ரிஷாத்துக்கு எடுத்துக் கூறியிருந்தேன். இருந்தபோதிலும் இரண்டு வருடங்களாக திட்டமிட்டு என்னை வெளியேற்ற வேண்டும் என்பதற்காக வைத்தியர் ஹில்மிக்கு வேட்பாளரைத் தருவதாக கூறி சதி நடத்திவிட்டுச் சென்றுள்ளார்.

இவ்வளவு காலமாக இப்படியொரு பிரதான சூத்திரதாரி இருப்பார் என்று நினைக்கவில்லை. தற்போது அறிந்து கொண்டேன், இவர்களது சுயரூபத்தை. இருந்த போதிலும் எதிர்வரும் 11ஆம் திகதி வேட்புமனுத் தாக்கலின் போது பொதுத் தேர்தலில் களமிறங்குவேன் என்பதைத் தெரிவிக்கின்றேன்." – என்றார்.

# கணவாய் பிடிக்கக் கடலுக்குச் சென்ற குடும்பஸ்தர் மாரடைப்பால் உயிரிழப்பு



யாழ்ப்பாணத்தில் கணவாய் பிடிப்பதற்குக் கடலுக்குச் சென்றவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

காக்கைதீவு, ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த கனகராசா சுரேஷ்குமார் (வயது 39) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபர் உட்பட சக தொழிலாளர்கள் என 5 பேர் நேற்று கணவாய் பிடிப்பதற்குக் கடலினுள் தடி நடுவதற்காகப் படகில் சென்றனர். இதன்போது மேற்படி நபர் திடீரென மயக்கமடைந்தார்.

அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மாரடைப்பால் மரணம் சம்பவித்தது என்று உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்தது. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.





# சிவில் அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவது முடியாத விடயம்

## தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் சிவகரன் விளக்கம்









சிவில் அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட முடியாது. மாறாக அவ்வாறு செயற்பட்டால் அவை அரசியல் கட்சியாகவே மாறிவிடும் என்று தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

“இன்று(நேற்று) வவுனியாவில் சிவில் அமைப்புக்கள் மற்றும் சமூக மாற்றத்தை விரும்புபவர்களைப் பகிரங்கமாக அழைத்திருந்தோம். எந்தவித வேறுபாடுகளும் இன்றி ஆரோக்கியமான, வெளிப்படையான கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன் பிரகாரம் தேர்தல் அரசியல் கடந்து ஏனைய விடயங்களை கையாளும் நோக்கில் 15 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

அக் குழுவானது ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்களையும் பிரதிநிதிப்படுத்திக்கொண்டு தமிழ் மக்களின் அடிப்படை சார்ந்த விடயங்களை தேர்தல் அரசியலுக்கு அப்பால் முன்னெடுக்க வேண்டிய விடயங்களை ஆராய்ந்து முன்னோக்கி நகர்த்துவதற்கான செயற்பாட்டில் ஈடுபடும்.

இக்குழுவானது எவ்வித அரசியல் விவகாரங்களிலும் ஈடுபடாது. அரசியல் கட்சிகள் சார்ந்தோ அல்லது இணைந்தோ எந்த செயற்பாட்டையும் முன்னெடுப்பதற்கான தீர்மானம் எவையும் எடுக்கவில்லை.

எதிர்வரும் வாரங்களில், பொதுக் கட்டமைப்புடன் கலந்துரையாடி நாங்கள் தொடர்ந்து, இணைந்து எவ்வாறு பயணிக்கலாம் என்ற நிகழ்ச்சி நிரலை வகுக்க வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளோம்.

பொதுக்கட்டமைப்பானது ஜனாதிபதி தேர்தலுக்காக உருவாக்கப்பட்டு அரசியல் கட்சிகளுடன் இணைந்து பயணிக்க கூடியவர்களாக இருக்கிறது. சிவில் அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட முடியாது. மாறாக அவ்வாறு செயற்பட்டால் அது அரசியல் கட்சியாகவே மாறிவிடும். ஆகவே சிவில் அமைப்பின் தனித்துவம் இல்லாமல் போய்விடும். இப்போது தேர்தல் அரசியலில் உடன்படிக்கை செய்திருப்பதால் அவர்களும் அரசியல் கட்சிகளாகவே சமூக நிலையில் நோக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்தனர்.

நாங்கள் அவர்களோடு உரையாடத்தான் இருக்கின்றோம். எதிர்காலத்தில் அரசியலில் செயற்படுவார்களேயானால் அதற்கு நாம் சம்மதிக்கபோவதில்லை. எந்தவிதமான குழப்பங்களும் விரிசல்களும் எங்களுக்குள் இல்லை. அவர்கள் அரசியல் விவகாரங்களுக்காக தேர்தலுக்காக முன்னெடுக்கிறார்கள். கடந்த 10 வருடங்களாக இவ்விதமான கூட்டங்களை நடாத்திவந்திருக்கின்

றோம் என்ற அடிப்படையிலேயே இதனை நாம் நடாத்தினோம். இது ஏட்டிக்குபோட்டியாக தொடங்கப்படவில்லை. அவ்வாறான நோக்கமும் எமக்கில்லை. தேர்தல் அரசியலில் இந்த அமைப்பு எப்போதும் ஈடுபடாது.““ – என்றார் தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன்.

# சவூதி அரேபியாவில் 28 வருடங்களாக தடுத்துவைக்கப்பட்ட இலங்கைப் பெண்

சவூதி அரேபியாவில் வீடொன்றில் சுமார் 28 வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டிருந்த இலங்கைப் பெண்ணொருவர் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான தகவல்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு தெரியபடுத்தப்பட்டுள்ளதாக தூத ரகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பெண் கடந்த 10 ஆம் திகதி நாடு திரும்பியுள்ளார்.

வீட்டு உரிமையாளர் அந்தப் பெண்ணை தற்காலிக கடவுச்சீட்டின் ஊடாக நாட்டுக்கு அனுப்பியுள்ளதாகவும் தற்போது 75 வயதான அவர் ஹிந்தகஹவெவ பண்டார கொஸ்வத்த பகுதியில் வசிக்கின்றார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தப் பெண் குளியாப்பிட்டியவிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரின் ஊடாக 1995 ஆம் ஆண்டு மே 17 ஆம் திகதி சவூதி அரேபியாவுக்கு சென்றுள்ளார் என குறிப்பிடப்படுகிறது.

ஒரு வருடத்தின் பின்னர் குடும்பத்தினருடனான அவரது தொடர்பு துண்டிக்கப்பட்டதாகவும் தாயாரின் எந்தவொரு தகவலும் கிடைக்காததால் 1999 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடு செய்ததாகவும் அந்தப் பெண்ணில் மகன் தெரிவிக்கிறார்.

சுய நினைவு இழந்து நடமாட முடியாத நிலையிலுள்ள அந்தப் பெண்ணுக்கு நீதியை பெற்றுக்கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பெண்ணின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு 11 பில்லியன் ரூபா தேவை




நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான முதற்கட்ட பணிகள் குறித்து நேற்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தலைமையில் தேர்தல் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள், பிரதி மாவட்ட தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு 11 பில்லியன் ரூபா தேவைப் படுவதாகவும், அதற்கு ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை ஏற்பாடு செய்வது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## சஜித்தால் இந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சனிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்குச் சேவையாற்றியிருக்கின்றார் என்பதை 22 இலட்சம் மக்கள் உணர்ந்துள்ளனர்.

ஏனைய 42 சதவீதமானோர் நாட்டில் மாற்றமொன்று வேண்டும் எனத் தீர்மானித்துள்ளனர். அந்த மக்கள் ஆணைக்கு நாம் மதிப்பளிக்கின்றோம்.

ஏனையோரைப் போன்று நாடு வீழ்ச்சியடையும் வரை பார்த்துக்கொண்டிருப்பவர்கள் நாம் அல்லர். யார் ஆட்சி செய்தாலும் நாடு அபிவிருத்தியடைய வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

ஆனால், நாடு வீழ்ச்சியடைந்தபோது சஜித் பிரேமதாஸ பொறுப் புக்களை ஏற்கவில்லை. அவ்வாறான ஒருவரால் நாட்டைக் கட் டியெழுப்ப முடியும் என்று நாம் நம்பவில்லை. அதற்கான பலமிக்க தலைவராகவும் நான் அவரைப் பார்க்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய நாம் அனைத்து எதிர்க்கட்சிகளுக் கும் கூட்டணியமைப்பதற்கு அழைப்பு விடுத்தோம்.

ஆனால், இந்த விடயத்திலும் சஜித் பிரேமதாஸ முன்னை ரைப் போன்றே பழைய நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார். தன்னைப் பற்றி மாத்திரமே அவர் சிந்திக்கின்றார்.

பரந்துபட்ட ரீதியில் சிந்திக்கும் திறன் அவருக்கு இல்லை யென்றால் அது கவலைக்குரிய விடயமாகும். பொதுச் சின் னத்தில் பொதுக் கூட்டணியின் கீழ் நாம் பொதுத் தேர்தலில் களமிறங்குவோம்." – என்றார்

## ரணிலை அழைக்கின்றது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் முதல் இந்தப் பதவியை ஏற்குமாறு அவரிடம் ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், இது தொடர்பில் தமது பதிலை ரணில் விக் கிரமசிங்க இன்னும் வழங்கவில்லை எனக் கூறப்படுகின் றது.

ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்பட்ட விதத்தை அவதானித்த பிறகே அவருக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இவ்வாறு அழைப்பு விடுத்துள் ளது.

இனி நாடாளுமன்ற அரசியல் பயணத்தில் ஈடுபடப்போவ தில்லை என ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தெரியப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதனால் குழம்பிப்போன தலைவர் மாவை சேனாதிராஜா, அதன் பின்னர் எழுந்து பேசிய ஒவ்வொருவரும் தமக்கு எதிராகவே பேசுகின்றார்கள் என்று கருதி எல்லா பேச்சுக்களுக்கும் அவசரப்பட்டு பதில் கொடுக்க முயன்றமையையும் காணமுடிந்ததாக உறுப்பினர் ஒருவர் சொன்னார்.

இப்படி கட்சியின் முடிவைப் பகிரங்கமாக மீறிச் செயல்பட்டவர்களிடம் எழுத்து மூலம் விளக்கம் கோரும் பொறுப்பு நேற்றைய கூட்டத்தில் கட்சியின் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. யார், யார் இவ்வாறு பகிரங்கமாகக் கட்சியின் முடிவுக்கு எதிராகச் செயல்பட்டார்கள் என்பதை அடையாளம் கண்டு, அவர்களிடம் விளக்கம் கோரும் கடிதங்களை அனுப்பும் பொறுப்பு செயலாளரிடமே ஒப்படைக்கப்பட்டது.

அப்படிப் பார்த்தால் கட்சியின் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் இது விடயத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் விளக்கம் கோரும் கடிதத்தை அனுப்பி வைப்பார் என எதிர்பார்க்கலாம். மேலும் சிறிதரன், சரவணபவன், சிறிநேசன், யோகேஸ்வரன் போன்றோரிடம் விளக்கம் கோரப்படக்கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன.

ஏனைய தமிழ் கட்சிகள் பழைய தமிழ் தேசிய கூட்டமைப்பு வடிவத்தில் தமிழரசு சின்னத்தில் போட்டியிடத் தயார் எனின் அவற்றுடன் பேச்சு நடத்துவதற்காக கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், கட்சிச் செயலாளர் சத்தியலிங்கம், முன்னாள் மட்டக்களப்பு மாநகர மேயர் சரவணபவன் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இதே சமயம் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழரசு வேட்பாளர்களை தீர்மானிப்பதற்கான அதிகாரத்துடன் தேர்வு குழு ஒன்றும் நேற்றைய கூட்டத்தில் நியமிக்கப்பட்டது.

தலைவர் மாவை சேனாதிராஜா, செயலாளர் சத்தியலிங்கம், சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நிர்வாக செயலாளர் குலநாயகம் மற்றும் சுமந்திரன், சாணக்கியன், மட்டக்களப்பு பிரதிநிதி ரஞ்சினி, துரைராஜசிங்கம், குருகுலராஜா, குககாதாசன், சேயோன் ஆகிய 11 பேர் குழுவே நேற்று நியமிக்கப்பட்டது.

தமிழரசு கட்சி சார்பில் போட்டியிடும் மாவட்ட வேட்பாளர்களை இந்தக் குழுவே தெரிவு செய்யும்.

இந்தக் குழுவில் இடம் பெறுவதற்கு சிவஞானம் சிறிதரனின் பெயர் பிரயோரிக்கப்பட்ட போதிலும் அவர் தாம் விலகி தமது இடத்தை குருகுலராஜாவுக்கு பரிந்துரைத்து வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் குழுவில் செல்வாக்கு மிக்க அணியின் கையே வேட்பாளர் தெரிவில் ஓங்கி நிற்கும் எனக் கருதப்படுகிறது.

இதேசமயம் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் போன்றோர் தாங்கள் இந்த நாடாளுமன்றத் தேர்தல் அரசியலில் போட்டியிடும் வேட்பாளராக வரமாட்டார்கள் என்பதை நேற்றைய கூட்டத்தில் கோடி காட்டினர்.

அதேசமயம் கட்சியில் புதியவர்களுக்கு இடம் அளிக்கும் விதத்தில் ஏற்கனவே இரண்டு, மூன்று தடவைகளுக்கு மேல் பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டவர்களுக்கு இந்த தேர்தலிலோ, அல்லது அதன் பின்னர் வரக்கூடிய மாகாண சபை தேர்தலிலோ, உள்ளூராட்சித் தேர்தல்களிலோ வாய்ப்பு அளிக்கக்கூடாது என்று கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் பிரேரித்து மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் வழிமொழிந்த பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் சில குறிப்பிட்ட நபர்களுக்கு இடம் அளிக்கப்பட மாட்டாது என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் இந்தத் தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

## கூட்டமைப்பை விட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியொன்றில் நேற்று சனிக்கிழமை காலை முதல் மாலை வரை நடைபெற்றது. அதன் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே முன்னாள் எம்.பி. சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் காலை முதல் மாலை வரை நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னரான விடயங்கள் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் கூடி ஆராய்ந்தோம்.

ஜனாதிபதித் தேர்தலில் கட்சி எடுத்த 3 தீர்மானங்களுக்கு மாறாக செயற்பட்டவர்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதிலே அப்படியாகக் கட்சியின் முடிவை மீறிச் செயற்பட்டவர்களிடம் விளக்கம் கோருவது என முடிவு எடுக்கப்பட்டது. அரியநேத்திரனைக் கட்சியில் இருந்து நீக்க வேண்டும் எனப் பலமான கருத்துக்கள் சொல்லப்பட்டிருந்தாலும், கடந்த முதலாம் திகதி எடுத்த தீர்மானத்தில் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து அவர் விலக வேண்டும் என்று கோரியிருந்தோம். அதற்கு அவருடைய விளக்கக் கடிதத்தில் பதில் சொல்லப்பட்டிருக்கவில்லை. அது காலம் கடந்து கிடைத்தாலும் வாசித்து காட்டப்பட்டது. ஆகவே, அது சம்பந்தமாக அவரிடம் கேட்டுவிட்டு தீர்மானங்களை எடுக்கவுள்ளோம்.

முக்கிய விடயமாக ஆராயப்பட்டது நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக ஆகும். நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக நாங்கள் விசேட அறிவிப்பை மனவுவந்து விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கின்ற கட்சிகள் – விசேடமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெவ்வேறு காலகட்டங்களில் விலகிப்போன கட்சிகள் திரும்பவும் எங்களுடன் சேர்ந்து தேர்தலை முகம் கொடுக்க விரும்பினால் வர முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டப்பில் இருந்து விலகிச் சென்றவர்கள் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் சவால் மிக்க தேர்தலாக இருப்பதால் இணங்கி வந்து இந்தத் தேர்தலில் போட்டியிட முடியும். தமிழரசுக் கட்சியின் பெயரிலும், அதன் சின்னத்திலும்தான் கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிட்டோம். அந்தவிதமாக இந்தத் தேர்தலில் போட்டியிட நாங்கள் தீர்மானித்துள்ளோம். அப்படியாக அந்த அழைப்பை ஏற்று வந்தால் அவர்களுடன் பேச்சு நடத்தி வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பில் கலந்துரையாடி முடிவு எடுப்போம். அப்படி அவர்கள் வராவிட்டால் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும்.

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். அங்கே ஒரு தமிழ் உறுப்பினர் மட்டும்தான் தெரிவு செய்யப்படும் நிலை இருப்பதால் அந்த விடயங்களை அந்த மாவட்டக் கிளைகளுடன் பேசி முடிவுக்கு வரலாம் எனத் தீர்மானித்துள்ளோம்.

அதற்கு மேலதிகமாக இம்முறை வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள கொழும்பு உட்பட தமிழர்கள் வாழும் ஏனைய மாவட்டங்களிலும் போட்டியிடப் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்தல் ஆரம்பிக்கவுள்ளதால் பிரிந்து சென்றவர்கள் மீள வருவது தொடர்பாக மிக விரைவாக அவர்களது பதிலை எதிர்பார்க்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கட்சிகள் வந்து இணைவதற்கு அழைப்பு விடுத்துள்ளோம். அதற்கு வெளியே வேறு கட்சிகள் வந்தால் அதனைப் பரிசீலிக்கலாம்.

ஏனெனில் எங்களது கட்சியில் இருந்து பிரிந்து போனவர்களது கட்சியும் மேலும் பிரிந்து இருக்கின்றது. அவர்களை உள்வாங்கும்போது சில ஆட்சேபனைகள் இருக்கும். அது பற்றி பேசியே முடிவு எடுப்போம். ஆனால், தீர்மானமாக அழைப்பு விடுப்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீள வாருங்கள் – சேர்ந்து பயணிப்போம் என்று புன்முறுவலோடு அவர்களை அழைக்கின்றோம்.

புதியவர்களைத் தேர்தலில் உள்வாங்குவது, இளைஞர்களை உள்வாங்குவது தொடர்பிலும் நீண்ட நேரம் பேசினோம். அதனைச் சரியாக நாம் அணுகுவோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. மக்களிடத்தில் இது தொடர்பான பாரிய எதிர்பார்ப்பு இருக்கின்றது. விசேடமாக தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றிக்கு பிற்பாடு அத்தகைய எண்ணப்பாடு எங்களது பிரதேசங்களிலும் உயர்ந்துள்ளது. அது நல்ல விடயம். இளைஞர்கள், ஆளுமையுள்ளவர்கள், படித்தவர்கள், பெண்கள் என அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையில்தான் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அதற்கான நியமனக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு இறுதி முடிவுகளை எடுக்கும். ஆனால், மாவட்ட ரீதியாக கலந்தாலோசித்துதான் அந்த முடிவுகள் எடுக்கப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் சிலர் எம்முடன் பேசியுள்ளார்கள். தம்முடன் இணையுமாறு அவர்கள் அழைப்பு எதனையும் விடவில்லை.

07▶

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின!

2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தங்களது பெறுபேறுகளை doenets.lk மற்றும் results.exams.gov.lk ஆகிய இணையத்தளங்களில் பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தப் பரீட்சைக்கு 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 விண்ணப்பதாரர்கள் தோற்றியிருந்ததுடன், நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 527 நிலையங்களில் பரீட்சை நடைபெற்றது.

இவர்களில் 3 இலட்சத்து 87 ஆயிரத்து 648 பாடசாலை விண்ணப்பதாரர்களும், 65 ஆயிரத்து 331 தனியார் விண்ணப்பதாரர்களும் உள்ளடங்கியுள்ளனர்.




## கூட்டமைப்பை விட்டு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நாங்கள் பிரதானமானதமிழ்க் கட்சி.

இதுவரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக வேறு கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டபோது தேர்தலுக்கு முகம் கொடுத்தது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரிலும், அதன் சின்னத்திலுமேதான். அதேமுறையில் நாங்கள் இந்தத் தேர்தலையும் சந்திப்பதற்குப் பிரதான கட்சி என்ற வகையில் நாங்கள் அவர்களுக்கும் அழைப்பு விடுகின்றோம்." – என்றார்.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேவையற்ற பிரகடனம்

முன்னைய ஜனாதிபதிகள் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து பின்பற்றி வந்த நடைமுறையை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் பின்பற்றியிருக்கின்றமை சர்ச்சையை உருவாக்கியிருக்கின்றது.

ஜனாதிபதிகள் மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பின்பற்றிய ஒரு நடைமுறையையே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பின்பற்றப் போய் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கின்றார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொது அமைதியைப் பேணுவதற்காக ஆயுதப்படைகளை அழைக்கும் வர்த்தமானி அறிவித்தலை புதுப்பிக்கும் விதத்தில் மீண்டும் வெளியிட்டமை மனித உரிமை ஆர்வலர்களின் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானியில், இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படையினர்ஆகியோரை நிர்வாக மாவட்டங்கள் மற்றும் அண்டிய கடல் பகுதியில் பொது பாதுகாப்பை பேணுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னர் கொண்டுவரப்பட்ட இந்த நடைமுறை, தொடர்ந்து வந்த அரசாங்கங்களாலும் பின்பற்றப்படுவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் உறுப்பினர் அம்பிகா சற்குணநாதன் சமூக ஊடகதளமான எக்ஸ் தளத்தில், ஜனாதிபதியின் இந்த முடிவு குறித்து தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். அத்துடன் அவர் இந்த நடவடிக்கையை விமர்சித்தார். பொது ஒழுங்கைப் பராமரிக்க ஆயுதப் படைகளை அழைக்கும் முடிவு தேவையற்றது என்று குறிப்பிட்ட அவர் இது இராணுவமயமாக்கலின் தொடர்ச்சி எனவும் விமர்சித்தார்.

சட்டப்பிரிவு 12 என்பது நாடாளுமன்ற அனுமதியின்றி ஒரு பகுதியான அவசரகால நிலையைப் பேணுவதற்கும், ‘நிலைமைய’ இயல்பாக்குவதற்கும் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதற்கு அனுமதிப்பதற்கும் ஒரு பொறிமுறையாகும் என்று சற்குணநாதன் மேலும் விரிவாகக் கூறினார். எனவே இந்த வர்த்தமானியை உடனடியாக ரத்து செய்யுமாறு ஜனாதிபதியிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆயினும், பொதுத் தேர்தல் நெருங்கி வருவதால், பொதுப் பாதுகாப்பைப் பேணுவது அவசியம் என்று வாதிடும் சில சமூக ஊடக பயனர்களிடமிருந்து இந்த முடிவு ஆதரவைப் பெற்றுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு இராணுவத்தை நிலைநிறுத்துவது நிறுத்தப்படலாம் என்று அவர்கள் கருத்து தெரிவித்தனர்.

ஆயினும், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலே, வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் வன்முறைகள், குளறுபடிகள் அற்றதாக நடந்து முடிந்திருக்கும் சூழலில், இனிக் கையோடே வரப்போகும் பொதுத் தேர்தலுக்காக இத்தகைய வர்த்தமானிப் பிரகடனம் மூலம் படைகளைக் களமிறக்கி, இராணுவ மயமாக்கலுக்கு வழி செய்வது பொருத்தமானது அல்ல.



# ஜம்மு காஷ்மீர் பகுதியில் பா.ஜ.க. ஆட்சி அமையும்

## இது மக்களின் அழைப்பு என்கிறார் பிரதமர் மோடி

ஜம்மு காஷ்மீரில் பா.ஜ.க. ஆட்சி வரப்போகிறது என்றும் இது மக்களின் அழைப்பாக உள்ளது எனவும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு ஜம்முவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பா.ஜ.க. மூத்த தலைவரும் பிரதமருமான நரேந்திர மோடி உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

“ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் ஒக்டோபர் 8 திகதி வெளியாக உள்ளன. அந்த முடிவுகள் வைஷ்ணவி தேவியின் ஆசிர்வாதத்தையும், ஒக்டோபர் 12 இல் வர உள்ள விஜயதசமியின் ஆசிர்வாதத்தையும் கொண்டு வர உள்ளன. இந்த விஜயதசமி புதிய புனித தொடக்கமாக இருக்கப் போகிறது. ஜம்மு, கத்துவா, சம்பா என எதுவாக இருந்தாலும் ஜம்மு அழைக்கிறது. பா.ஜ.க. ஆட்சி வரப்போகிறது.

ஜம்மு காஷ்மீரில் கடந்த பல பத்தாண்டுகளில் காங்கிரஸ், தேசிய மாநாட்டுக் கட்சி, மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் தலைவர்களும் அவர்களது குடும்பங்களும் மட்டுமே இங்கு செழித்து வளர்ந்தன. சாமானிய மக்களுக்கு அவர்கள் கொடுத்தது அழிவைத்தான்.

உங்கள் தலைமுறைகள் சந்தித்த அழிவுக்கு காங்கிரஸ் கட்சிதான் மிகப் பெரிய காரணம். சுதந்திரம் அடைந்ததில் இருந்து, காங்கிரசின் தவறான கொள்கைகள் உங்களுக்கு அழிவையே தந்துள்ளன. ஜம்முவின் பெரும் பகுதி எல்லையை ஒட்டி உள்ளது. ஒவ்வொரு நாளும் எல்லையில் இருந்து குண்டுகள் வீசப்பட்ட அந்த காலகட்டங்களில், “மீண்டும் ஒருமுறை போர்நிறுத்த மீறல்” என்று ஒவ்வொரு நாளும் ஊடகங்களில் பிரேக்கிங் நியூஸ் ஓடிக்கொண்டிருந்தது. இது உங்களுக்கு நினைவிருக்கும்.

அங்கிருந்து குண்டுகள் வீசப்பட்டபோது ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியினர் வெள்ளைக் கொடி காட்டினர். ஆனால், பா.ஜ.க. அரசு அந்த குண்டுகளுக்கு எறிகணைகளால் பதிலடி கொடுத்தது. இன்று செப்டம்பர் 28, 2016ஆம் ஆண்டு இந்த இரவில்தான் சர்ஜிக்கல் ஸ்டிரைக் நடந்தது. இதுதான் புதிய இந்தியா என்று உலகுக்குச் சொன்ன இந்தியா. புதிய இந்தியா வீட்டுக்குள் புகுந்து கொல்லும்.

தாங்கள் ஏதாவது தவறு செய்தால் மோடி அவர்களை நரகத்தில் கூட வேட்டையாடுவார் என்பது பயங்கரவாதத்தின் எஜமானர்களுக்கு தெரியும். நமது இராணுவத்திடம் சர்ஜிக்கல் ஸ்டிரைக் நடந்ததற்கான ஆதாரம் கேட்ட கட்சி காங்கிரஸ். சர்ஜிக்கல் ஸ்டிரைக் தொடர்பாக இன்றும் பாகிஸ்தான் மொழி பேசும் கட்சி காங்கிரஸ். அப்படிப்பட்ட காங்கிரஸை மன்னிக்க முடியுமா?

நாட்டிற்காக இறந்தவர்களை காங்கிரஸ் ஒருபோதும் மதித்தது கிடையாது. இன்றைய காங்கிரஸ் நகர்ப்புற நக்சலைட்டுகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. வெளிநாடுகளில் இருந்து ஊடுருவுபவர்கள் இங்கு வருவதை காங்கிரஸ் விரும்புகிறது. அவர்களை தங்கள் வாக்கு வங்கியாக காங்கிரஸ் பார்க்கிறது. அதேநேரத்தில், தங்கள் சொந்த மக்களை கொச்சையான முறையில் அவர்கள் கேலி செய்கிறார்கள்.

பல பத்தாண்டுகளாக காங்கிரஸ், தேசிய மாநாட்டுக் கட்சி, மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவை, தங்கள் தலைவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து வருகின்றன. இதனால், ஜம்மு மற்றும் காஷ்மீர் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தவறான கொள்கைகள், அலட்சியம் மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றால் நமது தலைமுறைகளின் வீழ்ச்சி மற்றும் சுரண்டலுக்கு முக்கிய காரணம் காங்கிரஸ் கட்சியே.

ஜம்மு காஷ்மீரில் செழிப்பை உறுதி செய்வதில் பா.ஜ.க. உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் உள்ளது. காங்கிரஸ்-தேசிய மாநாடு மற்றும் பி.டி.பி. ஆகியவை அரசியலமைப்பின் எதிரிகள். அரசியலமைப்புச் சட்டத்தின் கழுத்தை நெரித்தவர்கள்.

ஜம்முவில் பல தலைமுறைகளாக வாழும் பல குடும்பங்களுக்கு வாக்களிக்கும் உரிமை கூட வழங்கப்படவில்லை. இந்த உரிமையை காங்கிரஸ், என்.சி. மற்றும் பி.டி.பி. ஆகியவை பறித்தன. இன்று ஜம்மு காஷ்மீரில் நடக்கும் மாற்றங்களால் காங்கிரஸ், என்.சி. மற்றும் பி.டி.பி. ஆகியவை கோபமடைந்துள்ளன. உங்கள் வளர்ச்சி அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

தங்கள் அரசாங்கம் அமைந்தால், பழைய முறையை மீண்டும் கொண்டு வருவோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் மீண்டும் அந்த பாரபட்சமான முறையைக் கொண்டு வருவார்கள்.”- என்றார்.




## இஸ்ரேல் தாக்குதல்:

# ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் கொல்லப்பட்டார்

ஷேக் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டதை ஹிஸ்புல்லா அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஷேக் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டார் என இஸ்ரேல் இராணுவம் அறிவித்தது.

நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 64 வயதான ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டுள்ளார் என ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

பெய்ரூட்டில் ஹிஸ்புல்லா தளங்களை இலக்கு வைத்து இஸ்ரேல் விமான தாக்குதல்களை நடத்தியது. இதனால் பல குடியிருப்பு கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன.

இந்நிலையில், தங்களின் திட்டம் முடிவடைய வில்லை எனவும் தமது மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நபர்களை எவ்வாறு அணுக வேண்டும் என்பதை தாம் நன்கு அறிந்துள்ளதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இஸ்ரேலின் கொடூரமான தாக்குதல்களை எதிர்கொண்டு லெபனானை பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஹிஸ்புல்லா அமைப்பு கூறியுள்ளது.

இதேவேளை, ஈரான் ஆன்மீகத்தலைவர் அயாதுல்லா அலி கொமினி பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில் அவர் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் கொல்லப்பட்டதை தொடர்ந்து அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக லெபனானுடன் இணைந்து ஆராய்வதாக ஈரான் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இஸ்ரேல் வான்பரப்பை பயன்படுத்த வேண்டாம் என ஐரோப்பிய ஒன்றியம் விமான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.







# சீன அணுசக்தி நீர்மூழ்கி கடலில் மூழ்கியுள்ளது



சீனாவின் புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று கடலில் மூழ்கியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் வுஹான் அருகே உள்ள கப்பல் கட்டும் தளத்தில் நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கியுள்ளது, இது தொடர்பான தகவல்களை சீனா மூடிமறைத்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்புப் படைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

சீனாவினால் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பலே இவ்வாறு மூழ்கியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நீர்மூழ்கிக் கப்பலில் அணு எரிபொருள் ஏற்கனவே ஏற்றப்பட்டதா அல்லது கப்பல் மூழ்கியபோது எரிபொருள் நிரப்பப்படவில்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று அமெரிக்க மூத்த பாதுகாப்பு அதிகாரி கூறியுள்ளார்.

# லட்டு விவகாரத்தில் சுயநலத்தோடு செயல்படுகிறார் சந்திரபாபு நாயுடு

## நடிகை ரோஜா தெரிவிப்பு




திருப்பதி லட்டு விவகாரத்தில் சுயநலத்தோடு முதல்வர் சந்திரபாபு நாயுடு செயல்படுகிறார் என ஆந்திரா மாநில முன்னாள் அமைச்சரும், நடிகையுமான ரோஜா தெரிவித்தார்.

ஆந்திரா மாநில முன்னாள் அமைச்சர் ரோஜா மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் நேற்று முன்தினம் தரிசனம் செய்தார்.

கோயிலிலிருந்து வெளியே வந்த அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“திருப்பதி லட்டு விவகாரத்தில் சந்திரபாபு நாயுடு சுய நலத்தோடு செயல்படுகிறார். ஆட்சிக்கு வந்து 100 நாள்களில் ஒரு திட்டமும் கொண்டுவரவில்லை. தனது தவறைமறைக்கவே லட்டு விவகாரத்தை கையில் எடுத்துள்ளார். ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சி மார்ச் மாதத்தோடு முடிந்தது. ஜுலை மாதத்தில் திருப்பதி கோயிலுக்கு நெய் வந்தது. அதில் 4 லாரி நெய் அனுமதிக்கப்பட்டது, 4 லாரி நெய் வனஸ்பதி கலந்ததால் நிராகரிக்கப் பட்டது.

ஜெகன்மோகன் ரெட்டியை அரசியல் ரீதியாக பூஜ்ஜியமாக்கவே இதுபோன்ற செயலில் சந்திரபாபு ஈடுபடுகிறார். அவருக்கு பக்தியும் இல்லை, கடவுள் மீது நம்பிக்கையும் இல்லை. மதத்தை வைத்து அவர் அரசியல் செய்கிறார். மத்திய, மாநில அரசுகளின் விசாரணையை சந்திக்க தயாராகவுள்ளோம். லட்டில் எந்தக் கலப்படமும் இல்லை. லட்டு விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்,

உச்ச நீதிமன்றக் கண்காணிப்பில் விசாரணை நடத்த வேண்டும். அவருக்கு கடவுள்தான் நல்ல புத்தி கொடுக்க வேண்டும் என அனைத்து கோயில்களிலும் வேண்டுகிறேன். முடிந்தால் மக்களுக்காக சேவை செய்ய வேண்டும், இல்லையெனில் இராஜினாமா செய்துவிட்டு ஓய்வெடுக்க வேண்டும். சனாதனம் பற்றி பேசும் துணை முதல்வர் பவன் கல்யாண் தனது வீட்டில் சனாதனத்தை கடைப்பிடிப்பதில்லை. அவர் சந்திரபாபு நாயுடு எழுதி கொடுத்ததை பேசி வருகிறார்.” – என்றார்.

# சர்வதேச புத்தகக் கண்காட்சியை ஜனாதிபதி அநுர பார்வையிட்டார்

இலக்கிய மாதத்தையொட்டி 25 ஆவது தடவையாக கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படும் "கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சியை" ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று பார்வையிட்டார்.

அதன்போது இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்த இந்தீவர, சிறுவர் புத்தகங்கள் தொடர்பிலான தேசிய கொள்கைப் பத்திரத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் வழங்கி வைத்தார்.

இதன்போது கண்காட்சிக்கு வருகை தந்திருந்த மக்கள் ஜனாதிபதிக்கு விசேட வரவேற்பளித்தனர்.

இங்கு 400 புத்தக கூடங்கள் அமைக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றைப் பார்வையிட வந்திருந்த மக்களோடு ஜனாதிபதி சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகின்ற "கொழும்பு சர்வதேச புத்தக் கண்காட்சி" செப்டம்பர் 27 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 06 ஆம் திகதி இரவு 9.00 மணி வரையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடத்தப்படுகிறது.

இதன்போது, பேராதனை பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி, கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உதார திக்கும்புர, பணிப்பாளர் சமந்தி ஜயசூரிய, மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இணை நிர்மாணப் பிரிவின் தலைவர் ருவன்திகா சேனநாயக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.











# பாடசாலைகளின் விசேட நிகழ்வுகளுக்கு பெற்றோரிடம் பணம் அறவிடக்கூடாது!




பாடசாலைகளில் இடம்பெறும் விசேட நிகழ்வுகளுக்குப் பெற்றோரிடமிருந்து பணம் அறவிடக் கூடாது எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள், வலய கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் இடம்பெறும் சிறுவர் தினம், ஆசிரியர் தினம் போன்ற விசேட நிகழ்வுகளுக்காகப் பெற்றோரிடமிருந்து பணம் அறவிடுவது தொடர்பில் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெறுவதால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# புலமைப்பரிசில் வினாத்தாள் கசிவு; ஆராய்வதற்கு 7 பேர் கொண்ட குழு

தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள் கசிந்த சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக 7 பேர் கொண்ட சுயாதீன விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தரவினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சுயாதீன விசாரணை அதிகாரிகளும், சுயாதீன கண்காணிப்பு அதிகாரிகள் குழாமும் அந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்படி குழுவின் விசாரணை அறிக்கையை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் கல்வியமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

# கொள்கை வட்டி வீதங்களை மாற்றமின்றி பேண தீர்மானம்

கொள்கை வட்டி வீதங்களை மாற்றமின்றித் தொடர்ந்தும் ஒரே மட்டத்தில் பேண இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இதற்கமைய துணைநில் வைப்பு வசதி வீதம் 8.25 சதவீதமாகத் தொடர்ந்தும் பேணப்படவுள்ளது.

அத்துடன், துணைநில் கடன் வசதி வீதம் 9.25 சதவீதமாக மாற்றமின்றி பேணப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.




இதேவேளை, உள்ளூர் சந்தையிலிருந்து கணிசமான டொலர்களை மத்திய வங்கி கொள்வனவு செய்ததன் ஊடாக உத்தியோகபூர்வ கையிருப்பு கடந்த ஒகஸ்ட் மாத இறுதியில் 6 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

# அமைச்சுகளின் விடயதானங்களை அறிவித்து அதிவிசேட வர்த்தமானி

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட புதிய அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கான விடயதானங்களை அறிவித்து அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி பாதுகாப்பு, நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத் துறை, வலுச்சக்தி விவசாயம், காணி, மற்றும் கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீர் வழங்கல் ஆகிய அமைச்சுகள் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

அதற்கமைய பாதுகாப்பு அமைச்சின் கீழ் 26 நிறுவனங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய பாதீட்டு திணைக்களம், தேசிய பாதுகாப்பு நிதியம் உட்பட நிதி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 62 ஆகும்.

இலங்கை மின்சார சபை உட்பட 11




நிறுவனங்கள் வலுச்சக்தி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

விவசாய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 35 ஆகும்.

அதன்படி 134 நிறுவனங்கள் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவின் கீழ் உள்ள 5 அமைச்சுக்களுக்கு 165 நிறுவனங்கள் ஒதுக்கப்பட்டன.

அதன்படி, சட்டமா அதிபர் திணைக்களம், சிறைச்சாலை திணைக்களம் உள்ளிட்ட 38 திணைக்களங்கள் நீதி அமைச்சில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பரீட்சை திணைக்களம் உட்பட 45 நிறுவனங்கள் கல்வி அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன.

விளையாட்டு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 15 நிறுவனங்களில் சுகததாச தேசிய விளையாட்டு அரங்கும் அடங்கும்.

வர்த்தக அமைச்சானது கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் உட்பட 41 நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது.

சுகாதார அமைச்சுக்கு தேசிய சுகாதார ஆராய்ச்சி நிறுவனம் உட்பட 26 நிறுவனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அமைச்சர் விஜித ஹேரத்துக்கு கீழ் உள்ள 6 அமைச்சுக்கள் 142 நிறுவனங்களை கொண்டுள்ளன.

பௌத்த மத விவகார திணைக்களம் உட்பட 53 நிறுவனங்கள் பௌத்த சாசன மற்றும் மத கலாசார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.



# ஷொட் கன் துப்பாக்கி ரவைகளை வைத்திருந்த நபர் ஒருவர் கைது!

(கனகராசா சரவணன்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள விநாயகபுரம் பகுதியில் சட்டவிரோதமாக ஷொட் கன் ரகத் துப்பாக்கியின் ரவைகளை வைத்திருந்து மிருகவேட்டையாடி-வரும் 54 வயதுடைய ஒருவரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8 துப்பாக்கி ரவைகளுடன் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் யு.எல்.எஸ். ஆப்தீன் தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்துப் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் யு.எல்.எஸ். ஆப்தீன் தலைமையிலான பொலிஸார் வெள்ளிக்கிழமை இரவு விநாயகபுரம் 4 ஆன் பிரிவிலுள்ள காயத்திரிகிராமம் பகுதியிலுள்ள மேற்படி நபரின் வீட்டை முற்றுகையிட்டுச் சோதனையிட்டனர்.


இதன்போது பாவிக்க கூடிய ஷொட் கன் ந்த் துப்பாக்கியின் 5 ரவைகள வெறுமையான ரவைகள் 3 உட்பட 8 ரவைகளை மீட்டமையுடன் ஒருவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் 54 வயதுடையவர் எனவும் காட்டுமிருகங்களை சட்டவிரோத உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகளை பாவித்து வேட்டையாடி வருபவர் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவர் மத்தேகொட

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக அனுர மத்தேகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், சட்டத்தரணிகள் சங்கத்தின் துணைத் தலைவராக ராசிக் சரூக் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் கௌசல்ய நவரத்ன மற்றும் முன்னாள் பிரதித் தலைவர் நலிந்த இந்ததிஸ்ஸ ஆகியோர் பதவி விலகியதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேலும் தெரிவித்தது.

# ரணில் ஆரம்பித்தவற்றையே ஜனாதிபதி அநுர செய்கிறார்

## கஞ்சன விஜேசேகர கூறுகின்றார்



"நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை நிறுத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கக் கூடாது."

– இவ்வாறு முன்னாள் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

"தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, கடந்த அரசாங்கத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட பல வேலைத் திட்டங்களை மீள முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளார்.

குறிப்பாக கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் மானியம், உர மானிய தொகை அதிகரிப்பு மற்றும் இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சூரிய படலங்களைப் பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு புதிய ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் தேர்தல் காரணமாக, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அவை நிறுத்தப்பட்டன.

எனினும் தற்போது நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், மீண்டும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டங்களை நிறுத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கக் கூடாது எனக் கோரிக்கை விடுக்கிறோம்.

குறிப்பாகக் கடந்த அரசாங்கத்தில் கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு திறைசேரியின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டது.

எனினும் தேர்தல்கள் காலப்பகுதியில் அந்தப் பணிகளை முன்னெடுக்க வேண்டாமென நிதியமைச்சுக்கும் கடற்றொழில் அமைச்சுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கடிதம் அனுப்பப்பட்டது.

அந்த பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவை நிறுத்தப்படக் கூடாது.

ஜனாதிபதித் தேர்தலின் போது இந்த நிவாரணங்கள் நிறுத்தப்பட்டமையினால் கடற்றொழிலாளர்கள் உள்ளிட்ட பலரும் பாதிப்படைந்தனர். அவை தொடர்ந்தும் செயற்படுத்தப்பட வேண்டும்." – என்றார்.



# மட்டக்களப்பு ஆரையம்பதியில் 2 வாள்களுடன் இளைஞன் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் சட்டவிரோதமாக இரு வாள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் கைது செய்யப்பட்ட 25 வயது இளைஞன் ஒருவரை மட்டக்களப்பு நீதிவான் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிணையில் விடுவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் கடந்த வியாழக்கிழமை இரவு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஆரையம்பதியில் வைத்து சட்டவிரோதமாக 3 அடி நீளம் கொண்ட இரு வாள்களை வைத்திருந்த இருவரை கைது செய்து காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட இருவரில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யபட்ட ஒருவரை பொலிஸார் விடுவித்தமையுடன் தனது உடமையில் வாள்களை வைத்திருந்த 25 வயது இளைஞனை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தியபோது நீதிவான் அவரைப் பிணையில் விடுவித்துள்ளார்.



# 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவிலான மழை

நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி மத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவிலான பலத்த மழை பெய்யக்கூடும் என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் மழை பெய்யும் சந்தர்ப் பங்களில் பலத்த காற்றும் வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 39 ஆயிரத்து 137 பேர் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத் திலேயே பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி மேல் மாகாணத்தில் 16 ஆயிரத்து 463 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரம், டெங்கு நோயினால் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 19 பேர் பலியாகியுள்ள னர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள் ளது.

# மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

சந்தையில் மரக்கறிகளின் விலைகள் சற்று வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளன.

இதன்படி கரட், போஞ்சி, கோவா, வெண்டைக் காய் மற்றும் பூசணிக்காய் உள்ளிட்ட மரக்கறி களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக சந்தை வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய கொழும்பு மெனிங் சந்தையில் ஒரு கிலோகிராம் போஞ்சி 200 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் கரட் 150 ரூபாவாகவும் பதிவாகியுள் ளது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் கோவா 220 ரூபாவிற்கும், ஒரு கிலோ கிராம் கத்தரிக்காய் 200 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

மேலும் ஒரு கிலோகிராம் கத்தரிக்காய் 200 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் பூசணிக்காய் 60 ரூபாவாகவும் காணப்படுவதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.



# அநுரவின் வெற்றி சொல்லும் செய்தி!





புருஜோத்தமன் தங்கமயில்

"…ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கு வாக்களித்தேன். அவர் தோற்றுவிட்டார். ஆனால், பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்குத்தான் வாக்களிக்கப் போகிறேன். அநுர வந்ததும், யார் யாரோ பயன்படுத்திய அரசின் சொகுசு வாகனங்கள் எல்லாம் வெளி வருகின்றன. நான், நேரில் பார்த்திருக்கிறேன், சில மாத காலமாக முன்னாள் அமைச்சர் ஒருவர் சிறையில் இருந்தார். ஆனால், அவரின் பேத்தியை முன்பள்ளிக்கு ஏற்றி இறக்குவதற்காக பல கோடி மதிப்புள்ள அரச வாகனம் ஜனாதிபதித் தேர்தல் வரையில் பயன்படுத்தப்பட்டது. இப்படி அரச வளத்தை யார் யாரோ கொள்ளையடித்திருக்கிறார்கள். இதனைக் காணும் போது எரிச்சலாக இருந்தது. இப்போது, அந்த வாகனங்களை காலி முகத்திடலில் காணும் போது மகிழ்வாக இருக்கிறது. சஜித் வென்றிருந்தாலும், அந்த வாகனங்கள் மீட்கப்பட்டிருக்காது. பழைய அரசியல்வாதிகள் அப்படியே இருந்திருப்பார்கள். இவர்கள் புதியவர்கள், ஊழல் பழக நாள்களாகும்…" என்று சகோதர இன முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவர் இந்தப் பத்தியாளரிடம் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்த நாள் முதல், அந்தக் கட்சிக்கு பரம்பரை பரம்பரையாக வாக்களித்து வந்திருக்கின்ற அவர், கடந்த பொதுத் தேர்தலிலும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் சஜித்துக்கு வாக்களித்திருக்கிறார். அவர், தன்னை ஐ.தே.க. பரம்பரை ஆதரவாளர் என்று சொல்வதில் பெருமைப்படுபவர். அவருடைய தந்தையார், யாழ்ப்பாணத்தில் எண்பதுகளின் நடுப்பகுதி வரையில் வெதுப்பக (பேக்கரி) தொழில் செய்தவர். இம்முறையும் சஜித்துக்கு வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்திருப்பது தொடர்பில் மகிழ்வோடு இருப்பவர். வாழ்க்கைத்தரத்தில், மத்திய தரத்துக்கும் வறுமைக் கோட்டிற்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கும் அவர், ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான தன்னுடைய எண்ணப்பாட்டினை மேற்கண்டவாறு வெளிப்படுத்தினார்.

அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாகக் கடந்த திங்கட்கிழமை முற்பகல் பதவியேற்றார். அந்த நிகழ்வு, அரை மணி நேரத்தில் முடிந்துவிட்டது. அப்போது, ஜனாதிபதி செயலகத்துக்கு அண்மித்த காலி முகத்திடல் வாகனத்தரிப்பிடம் ஒரு காட்சியைப் பதிவு செய்தது. அங்கு முச்சக்கர வண்டிகளும், சில சிறிய ரக வாகனங்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. சொகுசு வாகனங்களின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணிவிடலாம். வழக்கமாக புதிய ஜனாதிபதி, அமைச்சரவை உள்ளிட்டவை பதவியேற்கும் போது, ஜனாதிபதிச் செயலகப் பகுதிக்கு செல்ல முடியாது. அவ்வளவு பாதுகாப்புக் கெடுபிடிகள் இருக்கும். அந்த வாகனத்தரிப்பிடம், சொகுசு வாகனங்களினால் நிறைந்து வழியும். ஆனால், அநுரவின் பதவியேற்பு நிகழ்வும், அதனோடு தொடர்புடைய இந்த காட்சிகளையும் தென் இலங்கை பெருவாரியாக ரசிக்கிறது. கடந்த காலத்தில் ஆட்சியும் அதிகாரமும் செல்வந்தர்களும், உயர் வர்க்கத்தினருக்கும் உரியது என்ற உணர்நிலை மக்களிடம்

தொடர்ச்சி ▼

# அநுரவின் வெற்றி சொல்லும் செய்தி!



தொடர்ச்சி▲

இருந்திருக்கின்றது. ஆனால், இம்முறை ஆட்சி மாற்றம் அதனை இல்லாமல் செய்திருப்பதாக மக்கள் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஓர் ஆட்சி தொடர்பில் மக்களின் இந்த அணுகுமுறை அவசரமானதுதான். ஆனால், அது, கடந்த கால ஏமாற்றங்களினால் வருவது. கடந்த காலத்தில் பாரம்பரிய அரசியல் கட்சிகளுக்கு மாறி மாறி வாக்களித்து வந்திருக்கின்ற தென் இலங்கை மக்களுக்கு, ராஜபக்ஷக்களின் இறுதி ஆட்சிக் காலம் பெரும் போதனைகளை வழங்கியிருக்கின்றது. 'அரகலய' எழுச்சியின் பின்னணியில் அகப்புற மறைகரங்கள் இருக்கின்றன. ஆனால், ஒரு கட்டத்துக்கு மேல், அரகலய மக்களின் பேரெழுச்சியோடு நடைபெற்றது. அது, பொருளாதார நெருக்கடிகளினால் எழுந்தது. அந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்கள் இப்போதைக்கு மீளப்போவதில்லை. ஆனால், அந்தப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியவர்களை பழிவாங்கியதான உணர்வோடு தென் இலங்கையின் கிராமத்து மக்கள் இருக்கின்றார்கள். அந்த உணர்வு அடுத்த கட்டத்தை அடையும் நிலையைக் காண முடிகின்றது. மூன்று வீத வாக்குகளோடு இருந்த கட்சியொன்று 43 வீதமான வாக்குகளைப் பெற்று, ஜனாதிபதித் தேர்தலில் வென்றிருக்கின்றது. அந்த வெற்றி மனநிலையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தி, பொதுத் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அதனை செய்யும் நடவடிக்கைகளில் தேசிய மக்கள் சக்தியினர் படிப்படியாக ஈடுபட்டு வருகிறார்கள். அநுர பதவியேற்று இன்னும் ஒருவாரம் முழுமையாக நிறைவடையவில்லை. ஆனால், ஜனாதிபதித் தேர்தலைக் காட்டிலும் அநுரவுக்கான ஆதரவு என்பது தென் இலங்கையில் மாத்திரமல்ல, தமிழ் பேசும் சாதாரண மக்களிடமும் அதிகரித்திருக்கின்றது. அதுதான், பொதுத் தேர்தலை இவ்வளவு விரைவாக அநுர அறிவிப்பதற்கான காரணமாகும்.

"புதுத் தும்புத்தடி நல்லாத்தான் கூட்டும்.." என்றொரு உரையாடல் வழக்கம் தமிழ்ச் சூழலில் உண்டு. ஆட்சி மாற்றத்தை, அந்தக் கண்ணோட்டத்தோடு அணுகும் தரப்பினரும் உண்டு. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் வென்றதும், ராஜபக்ஷ் ஆட்சிக் காலத்தில் யார் யாருக்கோ வழங்கப்பட்ட அரச வாகனங்கள் பல கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன. அவற்றை ஊடகங்கள் நாளும் பொழுதும் ஒளிபரப்பின. நல்லாட்சியின் சாதனைக்கான சாட்சிகளாக அவற்றை முன்னிறுத்தத் தலைப்பட்டன. ஆனால், மைத்திரி– ரணில் இணை, ராஜபக்ஷக்களிடம் இருந்து அதிகார மாற்றத்தை பெற்றதேயன்றி, ஊழலில் ஊறித் திளைத்தது. மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடக்கம், நாட்டை வங்குரோத்தாக்கும் பல வேலைகளில் ஈடுபட்டது. ஜனநாயக இடைவெளியொன்று ஏற்பட்டாலும், நாட்டின் பொருளாதாரம் பெரியளவில் மீளவில்லை. ஊழல்வாதிகளாலும், சலுகை அரசியலினாலும் நாடு சூறையாடப்பட்டது. இன்னொரு பக்கம், நாட்டை அரசமைப்பு – ஆட்சிக் கவிழ்ப்புக் குழப்பங்களுக்குள் தள்ளி அலைக்கழித்தனர். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் அரச உயர்மட்டத்தினருக்கு தெரிந்தே நிகழ்ந்ததான சாட்சியங்கள் வெளியாகின. அந்தத் தாக்குதல், தென் இலங்கையில் இனவாதத்தை தீயாக பரப்புவதற்கு பயன்படுத்தப்பட்டது. அந்த இனவாதத் தீயை விழுங்கிய தென் இலங்கை மக்கள், ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சிக்கான வாக்குகளை வழங்கி இறுமாப்புக் கொண்டார்கள். அவர்களுக்கு தாங்கள் விழுங்கியது 'தீ' என்பது, சில மாதங்களுக்குள்ளேயே உறைக்கத் தொடங்கிவிட்டது. அத்தோடு, கொரோனா கால கெடுபிடிகளும், பொருளார நெருக்கடிகளும் சேர்ந்து, இன்னும் சில விடயங்களை உணரவைத்தன. அந்த உணர்நிலையின் நீட்சிதான், இப்போது அநுரவின் வெற்றியாகவும் தேசிய மக்கள் சக்தி மீதான திடீர் அபிமானமாக மாறவும் காரணமாகும். இந்தக் காரணங்களை இனவாத அரசியல்வாதிகள் இலகுவாக மடை மாற்றுவார்கள். அதனை எப்படி, அநுர கையாளப் போகிறார் என்பதுதான், அவரினதும் அவரின் தோழர்களினதும் எதிர்கால அரசியலை தீர்மானிக்கும்.

மக்கள் விடுதலை முன்னணியின் வரலாற்றோடு தென் இலங்கையின் அனைத்து மக்களும் தங்களைப் பொருத்திக் கொள்ள விரும்புவதில்லை. அதற்கு, அந்தக் கட்சியின் கடந்தகால ஆயுதப் போராட்ட வன்முறை வரலாறும், தென் இலங்கையின் சாதிய ஏற்றத் தாழ்வுச் சிக்கல்களும் பெரும் காரணங்களாகும். அதனை, அந்தக் கட்சி, அநுரவின் தலைமைத்துவ வருகையோடு மாற்றிக் கொள்ளத் தொடங்கியது. அதனால்தான், மக்கள் விடுதலை முன்னணி அடையாளத்தினை மெல்ல மெல்ல பின்தள்ளி, புதிதாக தேசிய மக்கள் சக்தி அடையாளத்தை போர்த்திக் கொண்டது. தேசிய மக்கள் சக்தியின் அடை

தொடர்ச்சி▼

# அநுரவின் வெற்றி சொல்லும் செய்தி!

தொடர்ச்சி▲

யாளத்தின் பின்னால் புத்திஜீவிகள், முன்னணிக் கலைஞர்கள், இடதுசாரி சிந்தனையில் நெகிழ்வுப் போக்கைக் கொண்டிருக்கின்ற புதிய தலைமுறையினர் என்று பலதரப்பினரும் திரட்டப்பட்டனர். இன்றைய பிரதமர், கலாநிதி ஹறிணி அமரசூரிய கொழும்பின் உயர் மத்தியதர வர்க்கப் பின்னணியோடு வருபவர். கொழும்பு பிஷப் கல்லூரியின்





மாணவி. அவர், மக்கள் விடுதலை முன்னணிக்கும் தேசிய மக்கள் சக்திக்குமான இடைவெளியின் ஓர் உதாரணம்.

ரில்வின் சில்வா, விஜித ஹேரத் போன்ற மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சிந்தாந்தத்தோடு இருக்கின்ற முக்கியஸ்தர்களினால் தேசிய மக்கள் சக்தி ஆளுமை செலுத்தப்படுகின்றது என்பது உண்மை. ஆனால், அவர்களின் முப்பது ஆண்டுகளுக்கும் மேலான தேர்தல் அரசியல் அனுபவம், கொள்கை நெகிழ்வுப் போக்குள்ள அரசியலுக்குள் அவர்களையும் தள்ளியுள்ளது. அதனால்தான், அவர்கள் தங்களின் பிடியை சற்றுத் தளர்த்திக் கொண்டு, தேசிய மக்கள் சக்தி அடையாளத்துக்காக வர்க்க வேறுபாடுகள் தாண்டி, உயர்குழாத்தினரையும் உயர்மத்தியதர வர்க்கத்தினையும் கட்சிக்குள் உள்வாங்கி, முக்கிய பொறுப்புக்களில் நியமித்தார்கள். ஹறிணி, தேசிய மக்கள் சக்தி உருவாக்கத்தோடு கட்சிக்குள் வந்து ஒரு சில ஆண்டுகளுக்குள்ளேயே தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டவர். இவ்வாறான நிலையை, வேறெந்த பாரம்பரிய கட்சியும் அனுமதிக்காது. ஆனால், வெறும் இரண்டு உறுப்பினர்களை மாத்திரம் பொதுத் தேர்தலில் வென்ற போதும், தனக்கு கிடைத்த தேசியப் பட்டியல் உறுப்புரிமைக்காக ஹறிணியை நியமித்ததன் மூலம், ஆட்சி அதிகாரத்துக்கான பயணத்துக்காக தங்களின் பதவி மோகத்தை பின்தள்ளி வைக்க முடியும் என்று மக்கள் விடுதலை முன்னணியினர் நிரூபித்தனர். ஹறிணி போன்றோர், தேசிய மக்கள் சக்தியின் அடையாளமாக தொடர்ந்தும் கட்டப்பட்டமையும் சேர்ந்துதான், ஆட்சி மாற்றமொன்றுக்கான சக்தியாக தேசிய மக்கள் சக்தியை மாற்றியது.

மக்கள் விடுதலை முன்னணி நினைத்தால்தான் போதும், போராட்டங்களினால் நாட்டை முடக்கிவிடும் என்ற நிலை இருந்தது. கொழும்பை நாளும் பொழுதும் போராட்டங்களினால் மக்கள் விடுதலை முன்னணி அலறவிடும். இன்றைக்கு, அவர்களிடமே ஆட்சியைக் கைளித்துவிட்டாகிவிட்டது. ஆக, போராட்டங்களுக்கு வாய்ப்புக்கள் குறைவு. பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்கள் பகிஷ்கரிப்புக் போராட்டங்களுக்குள் செல்வது குறையும். அதனால், குறித்த காலத்துக்குள் தங்களின் பட்டப்படிப்பை முடித்து இளைஞர்கள் வெளிவருவார்கள். தொழிற்சங்கங்களிலும் இதுதான் நிலை. ஆக, இனி வரப்போகும் ஐந்து ஆண்டுகளை இழுபறிகள் இல்லாமல் ஆட்சி நடத்துவதற்காக தேசிய மக்கள் சக்தியிடம் வழங்க வேண்டும் என்கிற நிலையிலும் தென் இலங்கை இருக்கின்றது. ஏனெனில், குழப்படிக்கார மாணவனிடம் வகுப்பின் பொறுப்பை ஒப்படைக்கும் ஆசிரியரின் உத்தி போன்றது அது. அதுபோக, கடந்த பத்து ஆண்டுகளில் குழப்பங்கள் இல்லாத ஆட்சிகள் நடைபெறவில்லை. நல்லாட்சிக் காலத்தில் இரு கட்சிகள் இணைந்த ஆட்சிகுழப்பங்களினாலும் இழுபறிகளினாலும் ராஜபக்ஷக்களை மீண்டும் ஆட்சியில் ஏற்றியது. ராஜபக்ஷக்கள் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சி பீடமேறிய போதிலும், அரகலய அதனை நிர்மூலமாக்கியது. அதன் பின்னர் வந்த ரணில், அதிகாரத்துக்காக நாட்டை ஊழலின் கூடாரமாக்கினார். இப்போது, வந்திருக்கும் மாற்றத்தை, அதன் போக்கில் அனுமதிக்கும் மனநிலைக்கு மக்கள் வந்திருக்கிறார்கள். அதனை கொள்கை – கோட்பாட்டு ரீதியிலான மாற்றம் என்று கொள்ள வேண்டியதில்லை. அப்படி யாராவது சித்தரித்தால், அது அபத்தமானது.

இன்றிருக்கும்கட்சிகளில்தேசிய மக்கள் சக்தி அளவுக்கு பிரச்சார உத்திகளை விரல் நுணியில் வைத்திருக்கும் கட்சிகள் ஏதும் இல்லை. அநுரவின் சமூக ஊடகப் பக்கங்கள், வழக்கமாக ஜனாதிபதி ஒருவரின் பக்கங்கள் போன்று காணப்படவில்லை. கிட்டத்தட்ட ஒரு செய்தி இணையம் போன்று, நொடிக்கொரு செய்தி – தகவலோடு வினைத்திறனோடு இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதிலும், மூன்று மொழிகளிலும் தெளிவான அணுகுமுறையைக் கைப்பிடிக்கின்றது. ஜனாதிபதி, அரசாங்கம் தொடர்பிலான செய்திகளுக்கு பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகங்களை நாடுவதற்கு முதலே,

தொடர்ச்சி▼



# அநுரவின் வெற்றி சொல்லும் செய்தி!

தொடர்ச்சி▲

ஜனாதிபதியின் சமூக ஊடகப் பக்கங்கள் அவற்றை வெளியிட்டு விடுகின்றன. இந்த வினைத்திறனை, தேசிய மக்கள் சக்தியினர், அனைத்து ஊடகக் கட்டங்களிலும் முன்னெடுக்கின்றார்கள். அதனை, தென் இலங்கை மக்கள் பெரியளவில் உள்வாங்கத் தொடங்கி விட்டார்கள். அது, தமிழ் பேசும் சமூகங்களிடமும் வரவேற்பைப் பெறத் தொடங்கியிருக்கின்றது. அப்படியான நிலையில், பொதுத் தேர்தலில் அவர்கள் ஆட்சி அமைப்பதற்கான ஆசனங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

புதிய அரசாங்கமாக கொள்கை மாற்றங்களை எப்படி செயற்படுத்தப்படுகின்றோம் என்பதை முழுமையாக காட்டுவதற்கு முன்னால், அநுரவின் அதிரடி நடவடிக்கைகளின் மூலம், படம் காட்டுதலை தேசிய மக்கள் சக்தி வாக்குகளைக் கவருவதற்கான உத்தியாகவே கையாள்கின்றது. தேர்தல் காலம் நீண்டுவிட்டால், தங்களில் குறைகள் மேலெழத் தொடங்கிவிடும், அதற்கு முன்னால், தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்தி ஆட்சியை காபந்து செய்துவிட வேண்டும் என்பது அந்தக் கட்சியின் ஒரே நிலைப்பாடு. அதற்கான நகர்வுகளில் தெளிவாக இயங்குகின்றது.

தென் இலங்கை அரசியல் எதிர்காலத்தில் 'தேசிய மக்கள் சக்தி எதிர் இன்னொரு பாரம்பரியக் கட்சி' என்ற நிலைக்குள் நிரற்படுத்தப்பட வேண்டும் என்ற ஓட்டத்திலும் அநுரவும் அவரது தோழர்களும் குறியாக இருக்கிறார்கள். ஏனெனில், மூன்று பிரதான கட்சி அரசியல் என்பது, இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தேசிய மக்கள் சக்திக்கு உதவியதுதான். ஆனால், மூன்று கட்சி நிலையை நீடிக்க அனுமதித்தால், அது, தங்களை எதிர்வரும் காலங்களில் தூக்கி தூர எறிந்துவிடும் என்ற பயமும் இருக்கின்றது. அதனால், கடந்த காலங்களில் எப்படி 'ஐ.தே.க. எதிர் சுதந்திரக் கட்சி' என்று அரசியல் ஆட்சி அதிகாரம் நிலை பெற்றதோ, அதே மாதிரி, எதிர்காலத்தில் 'தேசிய மக்கள் சக்தி எதிர் ஏதோவொரு பிரதான கட்சி' என்ற நிலையை பேண எண்ணுகிறார்கள். ரணிலும் ராஜபக்ஷ்க்களும் வீழ்ந்து போயிருக்கின்ற நிலையில், தங்களின் பிரதான எதிரியாக சஜித்தையும் அவரது ஐக்கிய மக்கள் சக்தியையும் தேசிய மக்கள் சக்தி நிறுத்திக் கொண்டு அரசியல் செய்யும். அதனை, இந்தப் பொதுத் தேர்தலில் மூர்க்கமான முன்னெடுத்து, அடுத்த கட்டங்களை உறுதி செய்யும். அதற்கு, இம்முறை தென் இலங்கை மக்கள் ஆதரவு வழங்கும் சூழல்தான் இருக்கின்றது. ரோஹண விஜயவீரவை, பொரளை மயானத்தில் வைத்து வீழ்த்தியது ரணசிங்க பிரேதமாஸ்வின் ஆட்சி. இப்போது, அவரின் மகனை அதிகாரத்தில் ஏறவிடாமல் விஜயவீரவின் தோழர்களும் இளைய சகோதரர்களும் தோற்கடித்து, ஆட்சியில் ஏறியிருக்கிறார்கள்.

காலம் – அதன் தன்மையை உள்வாங்கி பயணிப்பவர்களுக்குத்தான் மாட்சிமைகளை வழங்கும். மக்கள் விடுதலை முன்னணி இன்று தேசிய மக்கள் சக்தியாக நின்று உயர்த்தியிருக்கின்றது. இதனை, தமிழ்த் தேசியக் கட்சிகள் எப்போது உணரப்போகின்றன என்பதுதான் தெரியவில்லை.

## செப்டெம்பரின் முதல் 25 நாள்களில் 99,955 சுற்றுலாப் பயணிகள் வருகை

செப்டெம்பர் மாதத்தின் முதல் 25 நாள்களில் 99,955 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 21,607 ஆகும்.

மேலும், பிரித்தானியாவிலிருந்து 7,496 சுற்றுலாப்பயணிகளும், ஜெர்மனியிலிருந்து 6,651 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 6,640 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 14 இலட்சத்து 62 ஆயிரத்து 623 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.09.2024




உங்கள் லட்சியங்களை பூர்த்தி செய்து கொள்ள இன்றைய நாளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தன்னம்பிக்கை அதிகமாக காணப்படும். கடினமான பணிகளையும் இன்று எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் பணியில் நீங்கள் மிகப் பெரிய வெற்றியை காண்பீர்கள். உங்கள் பணிகளை ஒழுங்கான முறையில் கவனமாக ஆற்றுவீர்கள். இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க நீங்கள் முயல வேண்டும். இதன் மூலம் உறவில் அன்பும் இதமும் உருவாகும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்று பண லாபம் காண புதிய முதலீடுகளில் பங்கு கொள்வது சிறந்தது.

இன்று நீங்கள் துடிப்புடன் செயல்படுவீர்கள்.




இன்று அனுகூலமான பலன்கள் கிடைக்கும் நாள். சூழ்நிலைகள் உங்கள் வெற்றிக்கு சாதகமாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் தைரியத்துடனும் உறுதியுடனும் இருப்பீர்கள்.

இன்று விரைந்து வேலையை முடிக்க வேண்டும் என்று முனைவீர்கள். இதனால் நல்ல தரத்துடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு ஏற்படும்.

உங்களது வங்கியிருப்பு கணிசமாக உயரக் காண்பீர்கள். கையிலுள்ள பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வது நல்லது.

உங்களின் மன தைரியம் காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. இன்று சில எதிர்பாராத நன்மைகள் நடக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையாகப் பணியாற்றுவதற்கு இன்று பொறுமை அவசியம்.

உங்கள் அகந்தைப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனால் புரிந்துணர்வும் பாதிக்கப்படும். எனவே அகந்தைப் போக்கை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும். முக்கிய முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது. சிறந்த இசையைக் கேட்பது உங்களுக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் தரும்.

பணியிடச் சூழல் இன்று அனுகூலமாக இருக்காது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணிகள் சுமூகமாக நடக்க சக பணியாளர்களுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாகவும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இது உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காகச் செய்யும் செலவாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கு சாதகமான நாள். இன்று செயல்கள் அனைத்தும் சுமூகமாக நடக்கும். ஆன்மீக ஈடுபாடு நன்மை பயக்கும். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள இன்றைய நாளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று நீங்கள் உங்கள் திறமையைப் பயன்படுத்தி பணியாற்ற வேண்டும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும்.

இன்றைய நாளை மகிழ்ச்சியான நாளாக ஆக்கலாம். பயணங்கள் மூலம் இது சாத்தியம். உங்கள் துணையுடன் நேர்மையாக விசுவாசமாக நடந்துகொள்ள இது தக்க சமயம்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். இன்று கடினமான சூழல் காணப்படும். நீங்கள் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். முக்கியமான முடிவுகளை வேறு நாளைக்குத் தள்ளிப் போடவும்.

உங்கள் எதிர் காலம் குறித்த தேவையற்ற பயம் காரணமாக பணியிடத்தில் பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அமைதியாகவும் உற்சாகத்துடனும் பணியை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது இருவருக்குமிடையிலான நல்லுறவையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

வீட்டின் புனரமைப்புக்காக அல்லது புதுப்பிப்பதற்காகப் பணம் செலவு செய்வீர்கள். பணம் சேமிக்கும் வாய்ப்புக் குறைவாக இருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன் கிட்டாது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பிரார்த்தனை மற்றும் ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது பொறுமை தேவை. உங்கள் சக பணியாளர்கள் மூலம் சில தொந்தரவுகளை எதிர் கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது இருவருக்குமிடையிலான நல்லுறவையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது. பண வரவு காணப்பட்டாலும் தொடர்ந்து செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் பணம் சேமிக்கும் வாய்ப்பு குறைந்து காணப்படும். முறையாகத் திட்டமிட வேண்டியது அவசியம்.




உங்கள் இலக்குகளை அடைவதில் இன்று தாமதம் ஏற்படும். எனவே உங்கள் இலக்குகளைச் சிறப்பாகத் திட்டமிட வேண்டியது அவசியம். இன்று சில மாற்றங்கள் ஏற்படும். அனால் அவை முழு அளவில் நன்மை அளிக்காது.

பணியிடத்தில் பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழல் சவாலானதாக இருக்கும். பக்குவமான மனநிலையில் பணிகளை மேற்கொள்ளுங்கள்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் பெரிதாக நோக்கும் மனநிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடன் வேறுபாடு ஏற்படும். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இந்தப் போக்கைத் தவிர்க்க வேண்டும்.

இன்று சில கூடுதல் செலவுகள் காணப்படும். பண வரவை ஏற்படுத்த அதிர்ஷ்டம் அனுகூலமாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.09.2024




இன்று பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் அளிக்கும். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாக வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உற்சாகமான மனநிலை காரணமாக அவருடன் மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்துகொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். பணத்தை சுப காரியங்களுக்கு செலவு செய்யும் வாய்ப்பு உள்ளது.

இன்று தைரியமாகவும் உற்சாகமாகவும் இருப்பீர்கள்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. எதிர்காலம் குறித்த கவலையும் பயமும் காணப்படும். பிரார்த்தனை மற்றும் தியானம் சிறந்த பலன் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி திறமையாக சவால்களை கையாள வேண்டும்.

உங்கள் துணையிடம் நம்பிக்கையான இனிமையான உணர்வு கொள்ள வேண்டும். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் பாதுகாப்பின்மை உணர்வை தவிர்க்க வேண்டும். இதன் மூலம் இருவருக்கும் இடையிலான உறவில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பண வரவு காணப்படாது. சிறந்த பலனைக் காண அதிகமாகத் திட்டமிட வேண்டியது அவசியம்.




இன்று மகிழ்ச்சியான உற்சாகமான தருணங்கள் காணப்படும். உங்கள் சுய முயற்சி மூலம் நீங்கள் வளர்ச்சி காண்பீர்கள். இன்று வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி உங்களிடம் காணப்படும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். ஒழுங்கு முறையான அணுகுமுறை உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் உண்மையான அன்பை வெளிப்படுத்தி மகிழ்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களின் நம்பிக்கை உணர்வு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய சூழல் அதிருப்தியை அளிக்கும். அதிகமான சிந்தனையைத் தவிர்க்க வேண்டும். சமநிலையோடு இருக்க வேண்டும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் விரும்பத்தகாத சூழல் காணப்படும். எனவே பணியிடத்தில் ஒழுங்குமுறையுடன் பணியாற்ற வேண்டியது நல்லது.

உங்கள் துணையுடன் குழப்பமான மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். அதனை தவிர்த்து உற்சாகமாக உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள்.

இன்று பண இழப்பை சந்திக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தைக் கையாளும் போது கூடுதல் கவனம் தேவை.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park